# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/66 - 2018 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2018.11.09

*2096/66 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2018, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2096/18 ஆம் இலக்க மற்றும் 2018, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2096/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களானது, 2018, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 09.

**அட்டவணை**

(1) (அ) 2096/18 ஆம் இலக்க அறிவித்தலில் "(இல. 1) தேசிய ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பையும் அதன் I ஆம் II ஆம் III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களையும் நீக்குவதன்மூலம்;

(ஆ) அவ்வறிவித்தலில் "(இல. 2) இளைஞர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பையும் அதன் I ஆம் II ஆம் III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களையும் நீக்குவதன்மூலமும் ;

(இ) அவ்வறிவித்தலில் "(இல. 3) வெகுசன ஊடக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பையும் அதன் I ஆம் II ஆம் III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களையும் நீக்குவதன்மூலமும்;

(2) (அ) 2096/26 ஆம் இலக்க அறிவித்தலில் "(இல. 1) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பையும் அதன் I ஆம் II ஆம் III ஆம் நிரல்களின் கீழுள்ள விடயங்களையும் நீக்குவதன்மூலம்